ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2196/38 - 2020 ඔක්තෝබර් මස 07 වැනි බදාදා - 2020.10.07

*2196/38 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு காலி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டத்தின் III ஆம் கட்டத்தின் கீழ், குருதுவத்த நீர்த்தாங்கிக் கோபுரத்தை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினைச் சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையைச் சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

**வாசுதேவ நாணாயக்கார,**
நீர் வழங்கல் அமைச்சர்.

நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35, 'லக்திய மெதுர',
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2020, செத்தெம்பர் 30.
தொடர்பு இல. 5-2/GL/16

**அட்டவணை**

*காலி மாவட்டத்தின், அக்மீமன பிரதேச செயலகப் பிரிவில், 109ஏ, இஹலகொட கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் இஹலகொட-குறுதுவத்த கிராமத்தில் அமைந்துள்ள புஸ்சேஹேனகந்த அல்லது போகுனுகொடவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து 30 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

வடக்கு : ஜயன்தி சந்தியிலிருந்து வரும் பாதை ;
கிழக்கு : திரு. றுஹுனுகே என்பவர் உரிமம் கோரும் இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;
தெற்கு : திரு. றுஹுனுகே என்பவர் உரிமம் கோரும் இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;
மேற்கு : திரு. றுஹுனுகே என்பவர் உரிமம் கோரும் இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் : (1) திரு. சுகததாஸ றுஹுனுகே,*
*"தீப்தி", கல்வெடவத்த,*
*வலஹன்துவ.*

*10-852*

---

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு அலுத்கம, மதுகம மற்றும் அகலவத்த கூட்டிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ், கொலேமோதர நீர் மூல இடத்திற்கான நிலையப் பொறுப்பதிகாரிக்கான உத்தியோகபூர்வ விடுதியை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினைச் சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, 'லக்திய மெதுர',*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, ஒற்றோபர் 02.*
*தொடர்பு இல. 5-2/KT/18*

**அட்டவணை**

*களுத்துறை மாவட்டத்தின், மதுராவல பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 815/B, பஹலகொட கிராம அலுவலர் பிரிவில் நாஹல்ல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் Ka/MAD/2019/743 மற்றும் 2020.01.21 ஆந் திகதிய வரைபட படியெடுப்பில் துண்டிலக்கம் 2 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள கொலேமோதர ஓவிட என்றழைக்கப்படும் 0.0506 ஹெக்டயார் (20 பேர்ச்சஸ்) விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

வடக்கு : துண்டு இலக்கம் 01 மற்றும் வீதி ;
கிழக்கு : வீதி மற்றும் உரிமையாளரைக் கண்டறிய முடியாதுள்ள கொலேமோதர ஓவிட ;
தெற்கு : உரிமையாளரைக் கண்டறிய முடியாதுள்ள கொலமோதர ஓவிட ;
மேற்கு : துண்டு இலக்கம் 01.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் : முகவரியைக் கண்டறிய முடியவில்லை.*

*10-853*

## *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு காலி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டத்தின் III ஆம் கட்டத்தின் கீழ், நீர்த்தடாகம் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரசாலை ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினைச் சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, 'லக்திய மெதுர',*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, செத்தெம்பர் 30.*
*தொடர்பு இல. 5-2/GL/20*

**அட்டவணை**

*காலி மாவட்டத்தின், அக்மீமன பிரதேச செயலகப் பிரிவில், 155ஏ, ஹியாரே தெற்கு கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் ஹியாரே கிராமத்தில் அமைந்துள்ள அஸ்வத்தாராம விகாரைக்கு அருகாமையில் அமைந்துள்ள சமகி பாலர் பாடசாலை காணிக்குப் பின்புறமுள்ள காணியிலிருந்து 10 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

*வடக்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;*
*கிழக்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;*
*தெற்கு : பிரவேச வீதி பகுதி ;*
*மேற்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி.*

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் : (1) கௌரவ விகாரை அதிபதி,*
*வணக்கத்துக்குரிய கெடியபே இன்தசுமன*
*தேரர்,*
*அஸ்வத்தாராமய-ஹியாரே.*

*10-854*

---

## *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவிற்கான திருத்தம்*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபையின் றுவன்வெல்ல நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ், நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான காணிகளைச்*

*சுவீகரித்துக்கொள்வது சம்பந்தமாக பிரசுரிக்கப்பட்ட இலக்கம் 2064/7 மற்றும் 2018.03.26 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையின் 1A ஆம் பக்கத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கிராமத்தின் பெயர் மொரலிய எனவும், கிராம அலுவலர் பிரிவின் பெயர் மாஹல்ல எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதாயினும் அக்கிராமத்தின் பெயர் மாஹல்ல எனவும் கிராம அலுவலர் பிரிவின் இலக்கம் 103A, மொரலிய எனவும் திருத்தம் செய்யப்படுவதாக இத்தால் அறியத்தருகின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, 'லக்திய மெதுர',*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, செத்தெம்பர் 30.*
*தொடர்பு இல. 5/2/2/1329*

*10-855*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.